# இரட்சிப்பு ஜனவரி 2026 யுனிகோடு



## இயக்குநர் கடிதம்...

FROM THE MISSION DIRECTOR'S DESK

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

2025ம் ஆண்டு முழுதும் நம்மோடிருந்தவரும், 2026ம் ஆண்டிற்குள் கிருபையாய் நம்;மைக் கொண்டுவந்த வருமாகிய நம் கர்த்தாதி கர்த்தருக்கு தோத்திர பலிகளை ஏறெடுப்போம்.

இம்மாதம் 1ம் தேதி புத்தாண்டையும் (NEW YEAR), 6ம் தேதி பிரசன்னத் திருநாளையும் (EPIPHANY), 11ம் தேதி இயேசுவின் ஞானஸ்நானத்தையும் (BAPTISM OF JUSUS), 25ம் தேதி பரி.பவுல் குணப்பட்ட திருநாளையும் (CONVERTION OF ST.PAUL), 26ம் தேதி பரி. தீத்து மற்றும் பரி. தீமோத்தேயுவின் திருநாட்களையும் (FEAST DAY OF ST.TITUS AND ST.TIMOTHY) திருச்சபை ஆசரிக்கிறது. திருச்சபையோடு இணைந்து இந்த திருநாட்களை ஆசரித்து மகிழ்வோம்.

ஜெப-ஜன்னல் ஜெப நேரங்கள் (ஜன.9, 16, 23), 'அனைவரும்-ஊழியத்தில்' கைபிரதி ஊழியம், வேதாகம-போட்டிகள் ஆகிய நமது திட்டங்களில் பங்குபெற உங்களை அன்புடன் அழைக்கிறோம். பத்திரிக்கை ஊழியங்கள், வலைதள ஊழியங்கள் (www.ratchippu.com), காணொலி-செய்தி ஊழியங்கள், புத்தக-வெளியீட்டு ஊழியங்கள், கைப்பிரதி ஊழியங்கள், மிஷனரி ஊழியங்கள், திருச்சபை ஊழியங்கள் ஆகிய நமது ஊழிய இயக்குநரின் அனைத்து ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

ஜெப-விண்ணப்பங்கள், அனுபவ-சாட்சிகள் மற்றும் காணிக்கைகள் அனுப்புவோர் நமது ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்பிவையுங்கள். தகவல்-தொடர்பு விபரம், வங்கி விபரம், UPI விபரம் மற்றும் QR CODE ஆகியவை பக்கம் 18-ல் மற்றும் நமது வலைதளத்தில் (www.ratchippu.com) தரப்பட்டுள்ளன.. தேவகிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

# தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு

வேத-வரிகள்-179 ஜனவரி 2026 நெகே -9:33

**சத்திய வேதம் (ரேனியஸ்-1840)**
தேவரீரோவென்றால், எங்கள்மேல் வந்ததெல்லாவற்றிலும் நீதியுள்ளவர்; நீர் உண்மையாய் நடப்பித்தீர்; நாங்களோவெனில் ஆகாமியம்பண்ணினோம்.

**பரிசுத்த வேதாகமம் (பவர்-1867)**
கர்த்தாவே! எங்களுக்கு நேரிடப்பண்ணின எல்லா வற்றிலும் நீர் நீதியுள்ளவர்; நீர் உண்மையாய் நடப்பித்தீர்; நாங்களோ ஆகாமியம்பண்ணினோம்.

**திருவிவிலியம் (பொது-1995)**
கடவுளே! எமக்கு நேரிட்டவைகள் அனைத்திலும் நீர் நீதி உள்ளவர். ஏனெனில் நீர் உமது சொல்லுறுதியைக் காட்டியுள்ளீர். நாங்களோ தீயவை செய்துள்ளோம்.

**பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)**
தேவனே, எங்களுக்கு ஏற்பட்ட எல்லாவற்றிலும் நீர் நீதியுள்ளவர். நீர் உண்மையும் நேர்மையுமாயானவர். நாங்கள் தவறானவர்கள்.

# ஜெப-ஜன்னல் ஜெப-விண்ணப்பங்கள் - ஜனவரி 2026

**கர்த்தரை நோக்கி மன்றாடுவோம் - COME! LET US ALL INTERCEDE TO GOD**

1) அகில உலக சமாதானத்துக்காக... கம்போடியா-தாய்லாந்து, இஸ்ரேல்-சிரியா, இஸ்ரேல்-ஹமாஸ், இந்தியா-பாக். மற்றும் இஸ்ரேல்-ஈரான் போர் நிறுத்தங்கள் முழுமையாக கடைபிடிக்கப்பட... உக்ரைன்-ரஷ்யா போர் முடிவுக்கு வர... இலங்கை, பாகிஸ்தான், வங்கதேச பொருளாதாரம் சீரடைய... இயற்கை பேரிடர்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட...

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்தியாவில் மதவாதம், பிரிவினைவாதத்தை ஊக்குவிப்போரின் சூழ்ச்சிகள் முறியடிக்கப்பட... ஒடுக்கப்பட்ட மற்றும் சிறுபான்மை மக்களுக்கு எதிரான ஒடுக்குதல்கள் நிறுத்தப்பட... இந்திய நீதிமன்றங்கள் பாரபட்சம் இன்றி நீதி வழங்க... ஒன்றிய அரசு ஜனநாயக மரபுகளையும் அரசியல் சாசனத்தையும் மதித்து, அனைத்து தரப்பு மக்களின் நலனுக்காக பாரபட்சமின்றி செயல்பட...

3) தமிழ்நாட்டு மக்கள் இன - மத - மொழி பேதமின்றி ஒற்றுமையோடு நல்வாழ்வு வாழ... தமிழ்நாட்டில் தொழில்கள், வியாபாரம் செழிக்க... புயல், மழை, வெள்ள சேதங்களில் பாதுகாப்பு கிடைக்க... மத-வாத, பிரிவினை-வாத அரசியல் சக்திகள் கட்டுப்படுத்தப்பட...

4) திருமதி.சுந்தரிபாய் அவர்களின் முழு குடும்பமும் இரட்சிக்கப்பட...

5) திருமதி.ஷேரன் ஹெப்சிபா, திருமதி.சுமி ஜேஸ்மின், திருமதி.மெர்லின், திருமதி.பாக்கியா, திருமதி.திலகவதி மகேஷ், திருமதி.வைலட், திருமதி.சுதா, திருமதி.பிரியா சுதிர், திருமதி.ஹனா விஜய் திருமதி.புஷ்பாவதி ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

6) பிரி-கே.ஜி முதல் பள்ளியிறுதி வரை கல்வி பயிலும் நம் பிள்ளைகளுக்கு நல்ல சுகம், பெலன் அருளப்பட... ஆஷெர், ஜெரிக், ஜெர்லின், பிரியங்கா, ஷாலோம், கிளாட்சன் ஆகிய நம் பிள்ளைகளுக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

7) பிளஸ்-1, முதல் பி.ஹெச்.டி வரை உயர்-கல்வி பயிலும் நம் பிள்ளைகள் பிரேம், ஷிஃபியா, ஷெரின் டேவிட், ஜாஸ்மின், சிப்ரா, ஜாஷ்வா மேத்யூ, வில்சன், ஜோயல், ஜெனிபர், சாம், சிந்தியா பிரகாஷ் ஆகியோருக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

8) திருமதி.ஈவ்லின் USA, திருமதி.செல்வி, திரு.லவ்ஸ்லி ஞானதாஸ், திருமதி.ஜேஸ்மின் ஞானதாஸ், திரு.அசரியா ஞானதாஸ், பேபி.ஜாஃபியா, திருமதி.லீலா டேவிட், திரு.வெஸ்லி சாமுவேல், திரு.ஜெரி, திரு.நெல்சன் (நகோமி), திரு.சுந்தர்சிங், திரு.ஜூலியன், திரு.அப்பன் டேவிட் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

9) திருமதி. ராஜேஷ்வரி, திருமதி. சுந்தரிபாய், திரு. ஜெபனேசர், திருமதி. ஐரீன் வாக்கர், திருமதி. ஞானம் ஜெபராஜ், திருமதி. ஞானம் ராஜசேகர், னச. ஷீபா, திருமதி. ஜலீன் செல்லத்துரை, திருமதி. ரத்னாபாய் சாம், திருமதி. வசந்தா அன்பன், திருமதி. சுகிர்தா சின்னதுரை ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

10) நமது ஊழிய ஆதரவாளர்களான திரு.G.N.S.டேவிட், Dr.எவாஞ்சலின் ஜோன்ஸ், திருமதி.மேபா ஞானசுகி, திருமதி.கிரேஸ் பொன்மணி ரெக்ஸ், திருமதி.மேரி தேவதாஸ், திருமதி.சுஜாதா சாமுவேல், திருமதி.டெய்சி ஜெபதாஸ், MS.சவேரியம்மாள், திருமதி.லைசா ஏசுவடியான், திரு.தி.ஜெயக்குமார், திருமதி.சுவர்ணலதா அற்புதராஜ், திரு.டேவிட் மனோகரன், திருமதி.ஐரீன் வாக்கர் (கிரேஸ் திவ்யா), திருமதி.ராணி சாமுவேல்ராஜ், திரு.J.R.டேவிட், திருமதி. ஷைனி ஜேம்ஸ், திருமதி.அரோமா சாத்ராக், திரு.சாம்சன் ஆபிரகாம், திரு.S.J.P.ராஜா, திரு.அசரியா ஞானதாஸ், திருமதி.வனஜா ஹெர்பர்ட் ஆகியோருடைய குடும்பங்களுக்காக...

====================================================================================================

புத்தாண்டு: சிறப்பு தேவசெய்தி...

# நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் நீங்கள் செய்வதெல்லாம் வாய்க்கும்



**YOU ARE BLESSED**
**ALL THAT YOU DO SHALL PROSPER**

Rev. S.J.D. Dharmaraja

பிரியமானவர்களே! இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரிலே உங்களை அன்போடு வாழ்த்துகிறேன். அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை பகிர்ந்தளிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். கடவுள் தம்மைப் பின்பற்றுபவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக வாழவேண்டுமென விரும்பகிறார்; அதாவது, அவர்கள் கனிதரும் வாழ்வு வாழ அவர் விரும்புகிறார். குறிப்பாக கலாத்தியர் 5:22-23-ல் குறிப்பிடப்பட்டுள்ள அன்பு, மகிழ்ச்சி, சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நன்மை, விசுவாசம், சாந்தம் மற்றும் இச்சையடக்கம் ஆகிய ஆவியின் கனியாகிய அனைத்து நற்குணங்களையும் பெற்று வாழவேண்டுமென அவர் விரும்புகிறார்.

நாம் தொட்ட காரியங்கள் அனைத்தும் துலங்க, அதாவது எடுத்த காரியத்;தில் நாம் வெற்றியடைய அவர் விரும்பி, அந்த ஆசீர்வாதத்திற்கான வழிமுறைகளை சங்கீதக்காரர் வாயினால் (சங்.1) நமக்கு அறிவிக்கிறார். ஆண்டின் தொடக்கத்திலே, **நீங்கள் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள், நீங்கள் செய்வது எல்லாம் வாய்க்கும்** என்ற வாக்கை கடவுள் நமக்குத் தருகிறார். நாம் செய்யும் காரியங்கள் எல்லாம் வாய்ப்பதற்கான வழிமுறைகளை சங்கீதம்-1ஐ ஆதாரமாகக் கொண்டு தியானிப்போம்.

**1. உலகத்தை விலக்கியவர்களாக வாழவேண்டும்: (சங்.1:1)**

முதலாவதாக, நாம் இந்த உலகத்திலிருந்து பிரிக்கப்படவேண்டும். நாம் இவ்வுலகில் வாழ்ந்து வந்தாலும் இவ்வுலகத்தார் அல்ல, என்று திருமறை சொல்லுகிறது (யோவா.15:19, 17:14). ஆகவே நாம், சில உலக காரியங்களைத் தவிர்ப்பதால் காரியசித்தி கிடைக்கிறது; நம் ஆசீர்வாதங்களும் தொடங்குகின்றன. நாம் நடக்கத்தகாத ஒரு வழி, நாம் நிற்ககதகாத ஒரு இடம், நாம் உட்காரத் தகாத ஒரு இடம் குறித்து சங்கீதம்-1 நம்மோடு பேசுகிறது.

நடக்கத்தகாத வழி: தீயோரின் ஆலோசனையில் நடப்பதை விலக்குவோம். 'ஆலோசனை' வழிகாட்டுவதைக் குறிக்கிறது. 'தீயோர்' ஒழுக்கம் தவறிய மனிதரைக் குறிக்கிறது. நாம் பெறும் அறிவுரை கடவுளில் நங்கூரமிடப்பட்டதா? என்பதை நாம் யோசிப்பதேயில்லை. நாம் ஜாதகம் -

ஜோஸியம் பார்க்கவோ, எண்-கணிதம் கணிக்கவோ அல்லது ஒரு செலிபரிட்டியின் வார்த்தைப் படி நடக்கவோ முனைகிறோம். இவற்றைத் தவிர்க்க திருமறை அழைக்கிறது.

நிற்கத்தகாத இடம்: பாவிகளின் பாதையில் நிற்கலாகாது. 'நிற்பது' என்பது, உடன் நிற்பது, பின்பற்றுவது என்ற கருத்தைக் கொண்டுள்ளது. 'பாவிகள்' என்ற சொல் பாதை தவறியவர் அல்லது தவறான கொள்கை மற்றும் நடைமுறை உடையோரைக் குறிக்கிறது. தவறான கொள்கைகளைத் தவிர்ப்போம்.

உட்காரத்தகாத இடம்: அவமதிப்பவர்களின் இருக்கையில் அமரக்கூடாது. 'உட்கார்தல்' என்ற வார்த்தைக்கு வசிப்பது, தங்குவது அல்லது நிலைப்பது என்று பொருள்படும். 'அவமதிப்பு' என்பது வெறுப்பு, அவமரியாதை மற்றும் ஏளனத்தை குறிப்பது. கேலி, பரியாசம் செய்பவர்கள் விமர்சிக்கவும் அவதூறுகளை சுமத்தவும் விரும்புகிறார்கள். நாம் சேர்ந்திருக்க வேண்டிய இடத்தைவிட சேரக்கூடாத இடம் எது என்பதை உணர்வது அவசியம். மேலும், நாம் விசுவாசி களுடன் இணைக்கப்படாவிட்டால், இப்படிப்பட்ட தீயவர்களுடன் உறவாடும் பரிதாப நிலைக்குத் தள்ளப்படுவோம்.

சமீபத்தில் கிறிஸ்டியானிட்டி டுடே என்ற பத்திரிக்கையில், தேவ ஊழியர்கள் மத்தியில் மது அருந்துவது ஏற்றுக்கொள்ளப்படுவதாக ஒரு செய்தியைப் படித்தேன். சுவிசேஷகர்களிடையே மது குறித்த கருத்துக்கள் இவ்வாறு மாறக்காரணம் அவர்கள் தீயோர்; ஆலோசனையில் நடப்பதும், பாவிகள் வழியில் நிற்பதும், பரியாசக்காரகளுடன் உட்காருவதும்தான் என்பது தெளிவாகிறது அல்லவா?

நீங்கள் எங்கே நிற்கிறீர்கள்? எங்கே நடக்கிறீர்கள்? எங்கே அமர்ந்திருக்கிறீர்கள்? நண்பர்களே, சற்றே சுயபரிசோதனை செய்வீர்.

**2. வசனத்தில் ஊறியவர்களாக வாழவேண்டும்: (சங்.1:2)**

இரண்டாவதாக, நாம் கடவுளின் வார்த்தையால் நிறைவுற்றிருக்க வேண்டும். ஆசீர்வதிக்கப்பட விரும்பும் விசுவாசி, தேவ வார்த்தையின்படி நடககவேண்டும். புத்தாண்டில் ஆசீர்வதிக்கப்பட விரும்பும் விசுவாசி, உலகத்தின் வழிகளின்படி நடக்கவோ, நிற்கவோ, உட்காரவோ முடியாது என்பதை அறிவார், மாறாக வார்த்தையின்படி நடக்கிறார். "ஆனால் அவருடைய மகிழ்ச்சி கர்த்தருடைய சட்டத்தில் இருக்கிறது."| சங்கீதம் 119:103: "உங்கள் வார்த்தைகள் எவ்வளவு இனிமையானவை, அவை என் வாய்க்கு தேனைவிட இனிமையானவை!" கடவுளின் வார்த்தை உங்களுக்கு மகிழ்ச்சிகரமானதாகவா? மந்தமானதாகவா? எப்படித் தோன்றுகிறது? எரே.15:16 கூறுகிறது: "உங்கள் வார்த்தைகள் கண்டுபிடிக்கப்பட்டன, நான் அவற்றை சாப்பிட்டேன், உங்கள் வார்த்தைகள் எனக்கு மகிழ்ச்சியாகவும் என் இருதயத்திற்கு மகிழ்ச்சியாகவும் மாறியது."|

'தியானம்' என்பது அசைபோடுவது. பசு, தன் உணவை அசை போடுவதைப் போன்றதாகும்; யோசிப்பதும், வாயில்-மனதில் முணுமுணுப்பதும் ஆகும். பைபிள் தியானம் என்பது மனதை கடவுளின் வார்த்தையால் நிரப்புவதாகும். (வசனத்தில் ஊறுவது). இது "உமக்கு விரோதமாகப் பாவம் செய்யாதபடி, உம் வார்த்தையை என் இருதயத்தில் மறைத்து வைத்தேன்." என்ற சங்.119:11 வசனப்படி செய்வதாகும். யோசு.1:8: "இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயிலிருந்து பிரியவேண்டாம்; அதில் எழுதியிருக்கிற யாவையும் செய்ய நீ கவனமாயிருக்கும் படி, இரவும் பகலும் அதை தியானித்துக்கொண்டிரு; அப்பொழுது நீ செழித்து, வெற்றி அடைவாய். புத்தாண்டின் ஆசீர்வாதத்தைப்பெறும்படிக்கும், நம் செயல்கள் சிறப்படையும்படிக் கும், வசனத்தில் ஊறியவர்களாய் வாழ அழைக்கப்படுகிறோம்.

**3. உறவில் நெருங்கியவர்களாக வாழவேண்டும்: (சங்.1:3)**

"அவர்கள் நதியின் ஓரமாக நடப்பட்ட மரத்தைப் போல இருப்பர்." மத்திய கிழக்கு நாடுகளில், தண்ணீர் நிரம்பிய பகுதியில் மரங்கள் நடப்பட்டன அல்லது மரங்களுக்குத் தண்ணீர் கிடைக்க, ஒரு நீர்ப்பாசன முறை அமைக்கப்பட்டது. பல ஆண்டுகளாக வளர்ந்து வரும் பெரிய மரங்கள், கண்ணுக்குத் தெரியாத, நீர் நிலைகள்வரை நீண்டுள்ள வேர் அமைப்பைக் கொண்டுள்ளது என அறிஞர்கள் கூறுகிறார்கள். புத்தாண்டு வளமிக்க ஆண்டாக மாற்றப்படுவதற்கு நாம் வற்றாத ஜீவதண்ணீரையுடைய இயேசு கிறிஸ்துவை நெருங்கிவாழ (உறவில் நெருங்கியவர்களாக வாழ) அழைக்கப்படுகிறோம். அதுவே நீர்க்கால்களின் ஓரமாய் நடப்படுவது. புத்தாண்டில் நாம் காரியசித்தி அடையும்படிக்கு இரட்சிபின் மக்களாய் ஆவியின் கனிகளைத் தரும் மக்களாய் நிறைவாழ்வு வாழ்வோம்.

நாம் ஆதாமுக்குள் பாவமுள்ள நிலையிலிருந்து எடுக்கப்பட்டு, இயேசு கிறிஸ்துவுக்குள் இட மாற்றம் செய்யப்பட்டு, நதியோரம் நடப்பட்டு, வார்த்தையின் தண்ணீரால் (இயேசுவாகிய ஜீவ தண்ணீரால்) வளர்க்கப்பட்டுள்ளோம்.

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! ஆன்மீக செழிப்பு, காரியசித்தி பெற்று 2026ம் ஆண்டின் ஆசீர்வாதத்தைப் பெற விரும்பி, கிறிஸ்துவின் அன்பிற்குள் ஆழமாகச் செல்ல ஆதாரமாக மூன்று காரியங்கள் உங்கள் முன் வைக்கப்படுகின்றன. முதலாவது உலகத்தை விலக்கியவர்களாய் வாழ்வது, இரண்டாவது திருவசனங்களில் ஊறியவர்களாய் வாழ்வது, மூன்றாவது கடவுளின் உறவில் நெருங்கியவர்களாய் வாழ்வது. இம்மூன்று காரியங்களிலும் உறுதியாய் இருங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

---

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஆயர் மற்றும் உழிய இயக்குநர்,
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு, சாலிகிராமம், சென்னை. தமிழ்நாடு, தென்னிந்தியா

==========================================================

**நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள் - Good Tidings Bible-Prints Ministries**

# 'நல்ல விதைகள்' சுவிசேஷ கைப்பிரதிகள்

'GOOD SEEDS' GOSPEL TRACTS

சுவிசேஷ ஊழிய பயன்பாட்டுக்காக நற்செய்தி கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்துவருகிறோம். மட்டுமல்ல நற்செய்தி பணி செய்வோருக்கு கைபிரதிகளை இலவசமாய் வழங்கி வருகிறோம். ஒரு-வகை கைப்பிரதி வெளியிட ஆகும் செலவு ரூ.3500/- மட்டும். கைப்பிரதிகளை SPONSOR செய்து அனைத்து மக்களும் இயேசுவை அறிந்திட உதவுங்கள். SPONSOR செய்ய விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்புகொள்ளுங்கள். கைப்பிரதிகளை SPONSOR செய்த தேவபிள்ளை களுக்கு எங்கள் நன்றி. எமது கைப்பிரதிகளை இலவசமாகப் பெற்று உங்கள் ஊழியங்களில் பயன்படுத்த அன்புடன் அழைக்கிறோம். ஆமேன்.

---

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு, சாலிகிராமம், சென்னை-93. தென்னிந்தியா

.==========================================================

வேத ஆராய்ச்சி ....

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்



சங்கீதம்-104 ஜனவரி 2026 எப்பிசோடு-104

AUTHOR: Rev. Dr. D. SURESH RAJAN

## என் உயிரே, கடவுளைப் போற்று

**முன்னுரை:** அன்பான இரட்சிப்பு வாசகர்கள் யாவருக்கும் எமது கும்பத்தினரின் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகிறேன். 2025ல் நம்மை கண்ணின் கருவிழிபோல் காத்த கடவுள், இந்தப் புதுவருடத்திலும் நம்மை பத்திரமாய் பாதுகாத்து வழிநடத்துவார்.

நம்மை சுற்றி இருக்கும் இறைவனின் படைப்பாகிய உலகத்தை கவனமாகப் பார்த்தால், நாம் ஆண்டவரைப் போற்றாமல் இருக்கமுடியாது. நாம் பிரார்த்தனை செய்யும்போது நம் கவலைகளை, தேவைகளை, கடவுளிடம் சொல்கிறோம்; ஆனால், இந்த திருப்பாடலில் சங்கீதக்காரர் முதலில் இறைவனை போற்றுகிறார். “என் உயிரே, கடவுளைப் போற்று! என் ஆண்டவராகிய கடவுளே, நீர் மிகப் பெரியவர்.” (வச 1).

அன்பான இறைமக்களே! நமக்கு இறைவன் ஈகையாக அளித்துள்ள வெளிச்சம், காற்று, தண்ணீர், உணவு, வேலை, ஓய்வு, மூச்சு என எல்லாவற்றிலும் ஆண்டவரின் செயலைப் உற்றுநோக்க இந்தத் திருப்பாடல் நம்மை அழைக்கிறது.

**1. ஆண்டவர் மிகப் பெரியவர்: (வச.1 - 9)**

இந்தத் திருப்பாடலில், ஒளியை ஆடையாக உடுத்தியவர், வானத்தைப் பரப்பியவர், மேகங்களை வாகனமாக கொண்டவர், காற்றின் மேல் செல்பவர் என ஆண்டவரைக் குறித்து பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதை காணலாம். காலையில் சூரியன் மெதுவாக எழும்பும்போது, வசந்தமான காற்று வீசும்போது, மழைக்குப்பிறகு பசுமை தெரியும்போது, பெருங்கடலின் ஓசை கேட்கும்போது நம்மையும் அறியாமல் நமக்குள் இறைவனது மகத்துவத்தை, வல்லமையை உணர முடிகிறது. இவையெல்லாம் சிலர் கூறுவதுபோல தானாக நடப்பவை அல்ல. இவை, ஆண்டவர் எவ்வளவு பெரியவர் என்பதை நமக்குச் சுட்டிக் காட்டுகின்றன.வானங்கள் கடவுளின் பெருமையை அறிவிக்கின்றன. (தி.பா.19:1), மண்ணுலகம் முழுதும் அவரது மாட்சியால் நிறைந்துள்ளது (ஏசா.6:3) என்றும் நிலைக்கும் கடவுளின் தன்மையும், அவரது வல்லமையும் உலகப் படைப்பு முதல் அவருடைய செயல்கள் வடிவில் நம் மனக்கண்களுக்கு தெளிவாய்த் தெரிகின்றன (ரோம.1:20) என்று திருமறை கூறுகிறது.

ஒரு வீட்டைப் பார்த்தால் அந்த வீட்டை கட்டியவரை நினைப்பது போல, படைப்பைப் பார்க்கும்பொழுதெல்லாம் படைத்த ஆண்டவரை நினைக்கவேண்டும். நாம் கவலைப்படும்போது, ஆண்டவர் எவ்வளவு பெரியவர் என்பதை மறந்து விடுகிறோம். இந்த உலகத்தையே படைத்து பராமரிக்கும் ஆண்டவர், என் வாழ்க்கையையும் நடத்த முடியும் என்று நாம் நம்பவேண்டும்.

**2. ஆண்டவர் நல்லவர்: (வச.10 - 23)**

ஆண்டவர் பெரியவர் மட்டுமல்லர், அவர் நல்லவருமாவார். அவர் படைத்துவிட்டு விலகிப் போகவில்லை; மாறாக, தமது படைப்புகள் எல்லாவற்றையும் அவர் கவனித்துக்கொண்டிருக்கிறார். ஆண்டவர் விலங்கினங்களுக்கு மேய்ச்சல் மற்றும் தண்ணீர், மனிதர்களுக்கு உணவு மற்றும் மனதை மகிழ்விக்கும் பானம் என அனைத்து தேவையான நன்மைகளையும் அருளுகிறார். கடவுள் எல்லாருக்கும் நல்லவர் (தி.பா.145:9), அவர் எல்லா உயிர்களுக்கும் உணவு தருகிறார் (தி.பா.136:25), உங்களுக்கு என்ன தேவை என்று உங்கள் பரலோகத்தந்தை அறிந்திருக்கிறார் (மத்.6:32) என்று திருமறை நமக்கு கூறுகிறது.

கிராமத்தின் பொதுக்கிணறுபோல், ஆண்டவர் தரும் நன்மைகள் எல்லாருக்கும் பொதுவானவை. பறவைகளும் விலங்குகளும் அதில் தாகம் தீர்க்கின்றன, நாமும் அதில் பயன்பெறுகிறோம். 'வானத்துப் பறவைகளைப் பாருங்கள்; உங்கள் பரலோகத்தந்தை அவைகளுக்கு உணவுதருகிறார்' (மத்.6:26).

அன்பானவர்களே! ஆண்டவர் இவ்விதமாய், நம் அன்றாட வாழ்வின் தேவைகளை சந்திக்கிறார்; இதற்காக நாம் அவருக்கு நன்றி சொல்லுகிறோமா?

**3. ஆண்டவர் அருகிலிருக்கிறவர்: (வச. 24:30)**

ஆண்டவர் நாம் கண்டுபிடிக்க முடியாத தூரத்தில் இல்லை; அவர், நமது அருகிலேயே இருக்கிறார். அவரது மூச்சால் நாம் வாழ்கிறோம். ஒவ்வொரு உயிரும், உயிர்களின் ஒவ்வொரு மூச்சும், ஆண்டவரிடமிருந்து வரும் கொடை-வெகுமதி. 'நீர் உம்முடைய ஆவியை அனுப்பினால், உயிர்கள் உருவாகின்றன' (வச.30), 'கடவுளின் ஆவி என்னை உருவாக்கினார்' (யோபு.33:4), 'அவரிலே நாம் வாழ்கிறோம், நகர்கிறோம்' (அப்.17:28), 'ஆண்டவர் மனிதனுக்குள் உயிர் மூச்சை ஊதினார்' (ஆதி.2:7) என வேதவாக்கியங்கள் சான்று பகிர்கின்றன. ஆண்டவரை நம்பி வாழ்வது பலவீனம் அல்ல. அதுவே உண்மையான வாழ்வு.

**முடிவுரை:**

நமக்கு அருகாமையிலே இருந்து நமது தேவைகளை எல்லாம் சந்தித்து நமக்கு வாழ்வழிக்கும் இறைவனை நாம் போற்றிப்புகழக் கடமைப்பட்டுள்ளோம். இந்தத் திருப்பாடல் தொடங்கிய வார்த்தைகளிலேயே முடிவடைகிறது. 'என் உயிரே, கடவுளைப் போற்று!' (வச.35). நம் வாழ்வே ஒரு போற்றுதலாக மாற வேண்டும். ஆண்டவரே! உமது பெருமையைப் பார்க்க, எங்கள் கண்களைத் திறக்கவும், உமது நன்மையை நம்ப, எங்கள் உள்ளங்களை திறக்கவும் எங்களுக்குக் கற்றுத்தாரும் என வேண்டுதல் செய்வோம். கடவுள் தாமே உங்களோடிருந்து இந்த புதுவருடத்தில் உங்களை அற்புதமாய் காப்பாராக. ஆமென்..

சங்கீதங்கள் கற்றுத்தரும்விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்......

ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன், தலைவர் (இந்திய மறை மாநாடு),
குளோபல் மெத்தடிஸ்ட் திருச்சபை.

AUTHOR: REV. DR. D. SURESH RAJAN, CONFERENCE SECRETARY, INDIA ANNUAL CONFERENCE,
GLOBAL METHODIST CHURCH IN INDIA.

# வேதாகம போட்டி-182 (டிசம்பர் போட்டிகள்)

## சரியான பதிலளித்தோர்

1) அமலியா லோகநாதன் (திலை)
2)) அமிர்தகனி பொன்ராஜ் (சென்)
3) ஏஞ்சல் C. (திலி)
4) ஏஞ்சல் டார்வின் (கன்)
5) ஏஞ்சல் ராஜதுரை (சென்)
6) ஏஞ்சலின் யோசபாத் ராஜா (சென்)
7) ஏஞ்சலின் ரூஸ்வெல்ட் (சென்)
8) ஏஞ்சலின் வில்லியம்ஸ் (சென்)
9) அன்னாள் ஜெபக்கனி (கோய)
10) அனி பாய் ஜாண் (திலி)
11) அரோமா சாத்ராக் (திலி)
12) அருள்செல்வி ஜாண்ஸன் (திலி)
13) பெல்சி தங்கராஜ் (சென்)
14) பெனிட்டா பிராங்க்ளின் Dr. (சென்)
15) பிரிஸ்கில்லாள் பொன்ராஜ் (தென்)
16) பியூலா ஜேசுராஜன் (பாண்)
17) பியூலா ராஜசெல்வன் (கோய)
18) செலினா பென்சி வில்சன் Dr. (குவை)
19) செலினா வின்செண்ட் (திலி)
20) சந்திராபாய் மாசிலாமணி (சென்)
21) சந்திரலேகா (ஆபி)
22) சந்திரா மேரி விக்டர் (பெங்)
23) சந்திரா சாமுவேல் (திலி)
24) சார்லஸ் ஃபின்னி Dr. (சென்)
25) சார்லட் டேவிட் (சென்)
26) சித்ரா பெஞ்சமின் (திளு)
27) கிறிஸ்டல் ஜாய் யோபு (திதூ)
28) கிறிஸ்துதாஸ் (ஈரோ)
29) கிறிஸ்டி ஞானராஜ் (சென்)
30) கிறிஸ்டி ஜேம்ஸ் (மாய)
31) கிறிஸ்டி மெர்சி ராஜ்குமார்(தூத்)
32) கிறிஸ்டி பொன்னுசாமி (மது)
33) சிசிலி புஷ்பம் டேவிட் (சென்)
34) சிந்தி ஜாஷ்வா (தஞ்)
35) டெய்ஸி பில்பா ((மும்)
36) டெய்ஸி ஜெபதாஸ் (திசி)
37) டெய்ஸி சாம் (கன்)
38) டேனியல் தாமஸ் (திலி)
39) டேனிங் சொர்ணா ஜெஸ் (சென்)
40) டேவிட் J.R. (சென்/கோய)
41) தெபோராள் D. (சென்)
42) தேவபொன்மலர் ஜோனத்தான் (சென்)
43) தேவநேசம் ராஜாசிங் (சென்)
44) டோராபாய் ஜூலியஸ் (சென்)
45) தீபா மெர்சி கிறிஸ்டோபர் (சென்)
46) தேவகனி எமிலிசன் (சென்)
47) தேவகிருபை முத்து சகரியா (பாண்;)
48) எபெனேசர் கிரேஸ்லின் சாந்தி (திலி)
49) எபெனேசர் ஜெபசீலி மார்டின் (திதூ)
50) எலிசபெத் அலெக்ஸாண்டர் (சென்)
51) எலிசபெத் செல்லத்துரை (சென்)
52) எமிமாள் மில்டன் (சென்)
53) எமிமாள் சாமுவேல் ஜெஸிக்கா (மது)
54) எப்சிபா ஜாண் (ராணி)
55) எஸ்தர் டி.ஆர். (திலி)
56) எவாஞ்சலின் ஜோன்ஸ் னச. (சேல)
57) கெத்ஸி தம்புராஜ் (பெங்)
58) குளோரி ரவீந்திரன் (திலி)
59) ஞானஜோதி பேரின்பம் (விரு)
60) ஞானம் ஜெபராஜ் (திலி)
61) ஞானராணி G. (சென்)
62) ஞானசெல்வி மோசஸ் (அமெ)

63) கோல்டா ஜேசுபாதம் (மும்)
64) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் (சென்)
65) கிரேஸ் பிரின்ஸ் (தென்)
66) கிரேஸி கிறிஸ்டோபர் (சென்)
67) கிரேனா அன்புரோஸ் (சென்)
68) கிரேஸியா ஜெயபால் (சென்)
69) கிரிசெல்டா செய்லர் (சென்)
70) ஹெலென் ஜான்சிராணி (திலி)
71) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் (சென்)
72) ஹெலென் I. (திளு)
73) ஹெலன் திலக் (தூத்)
74) ஹேமா அஜீத் (சென்)
75) ஹேமா கேப்ரியேல் (பெங்)
76) ஹெப்சி அசரியா (பாண்)
77) ஹிம்லா ராஜகுமாரி (சென்)
78) இந்திரா கெத்ஸி டேவிட் (திலி)
79) இன்பவல்லி கலைச்செல்வன் (மது)
80) ஜமீலா செல்வராஜ் (சென்)
81) ஜமுனா K. (சென்)
82) ஜானகி டேனியல் (திலி)
83) ஜேன்ஸ் (ஜான்ஸி) (கோய)
84) ஜேன் தர்மராஜ் (திலி)
85) ஜான்ஸி சந்தியா (திலி)
86) ஜாஸ்மின் ஞானதாஸ் (சென்)
87) ஜாஸ்மின் ஜீவன் டேவிட் (மது)
88) ஜெபா ஜெயராஜ் (சென்)
89) ஜெபக்குட்டி மோசஸ் (திலி)
90) ஜெபரஞ்சிதம் மெர்லின் (தூத்)
91) ஜெபா ஜோன்ஸ் (கோய)
92) ஜீவா டேவிட் சாலோமோன் (தென்)
93) ஜெமீலா நிக்ஸன் (சென்)
94) ஜெமி ஜாய் பிளஸ்ஸி (திலி)
95) ஜெனிலா (சென்)
96) ஜென்ஸி ஞானேஷ் (மும்)
97) ஜெரின் ஸ்டீபன் (மும்)
98) ஜெஸி செல்லதுரை (கோய)
99) ஜெஸி ஜெயக்குமார் (திலி)
100) ஜெஸிதா அகஸ்டின் (ஆபி)
101) ஜெயா ஆல்பர்ட் (தஞ்)
102) ஜாய் ராபின்சன் (மது)
103) ஜாய்ஸ் பாண்டியன் (சென்)
104) ஜூலியட் அசோக் குமார் (தூத்)
105) ஜூலியட் ஜெயக்குமார் (திலி)
106) ஜஸ்டினா ஜெபராணி ராஜீவ் (அரி)
107) கலா கிருபாகரன் (திலி)
108) கலையரசி செல்வராஜ் (சென்)
109) கஸ்தூரி எலியாஸ் (திலி)
110) கிருபாவதி S. (சென்)
111) கோயில்பிள்ளை ஞானதாய் (தென்)
112) லதா மைகேல்ராஜ் (சென்)
113) லீலா டேவிட் (சென்)
114) லீலா ஜோஸப் (கோய)
115) லில்லி ஜாண்ஸன் (சென்)
116) லிஸி டென்சிங் (திலி)
117) லோவிசாள் ராஜேந்திரன் (தென்)
118) மல்லிகா ஜெபராஜ் (தூத்)
119) மல்லிகா V. (சென்)
120) மரிய பாப்பா (சென்)
121) மரியாள் J.S (தூத்)
122) மேபா ஞான சுகி (கன்)
123) மெஜிலா ஜோஷ்வா (தூத்)
124) மெர்சி ஃபுளோரா பாஸ்கரன் (வேலூ)
125) மெரிட்டா ஜெயபாலன் (திசி)
126) மில்காள் சாம் (சென்)
127) முத்துமாலினி அலீஸ் (கோய)
128) நேச மாலா பீட்டர் (திலி)
129) நிக்ஸன் எவர்பிரைட் (திலி)
130) ஆலிவ் ஜெயபாலன் (கோய)
131) ஓலிவியா லேங்டன் (திசி)
132) பாக்யபாய் ஆரோன் (திலி)
133) பெர்சி பால் பொன்சிங் (தூத்)
134) பிங்க்லின் சந்தோஷ் (சென்)

135) பொன்மணி உத்தமசிங் (சென்)
136) பிரேமா ஸ்டாலின் (சென்)
137) பிரேம்குமாரி ஜெய்சிங் (சென்)
138) பிரின்ஸ் தயாநிதி (சென்)
139) பிரிசில்லா சந்திரதாஸ் (சென்)
140) பிரிஸ்கில்லாள் சசி (கோய)
141) ரேச்சல் ஈஸ்டர் (வேலூ)
142) ராஜபிரமீளா (திதூ)
143) ராஜ்மேரி சார்லஸ் (கேர)
144) ரமோலா அதிசயராஜ் (திலி)
145) ராணி பிரபாகர் (திலி)
146) ராணி சாமுவேல்ராஜ் (சென்0
147) ரத்னா டென்னிஸன் (சவு)
148) ரத்னாவதி பாண்டியன் (சென்)
149) ரோஸி ஸ்டீபன் (சென்)
150) ரியல்ஸி ஜாண்சிங் (கோய)
151) ரூபவதி நோபிள் (திலி)
152) ரூத் HAPP (திசி)
153) ரூத் ஜாண்ஸன் (திலி)
154) ரூத் நரேஷ் (சென்)
155) சலோமி மனோகர் Dr. (சென்)
156) சம்பு ஜெயச்சந்திரன் (மது)
157) சாரா பாலசிங் (மது)
158) சரோஜா செல்வராஜ் (சென்)
159) சரோஜினி எலிசபெத் (சென்)
160) செல்வ அமுதா ஜார்ஜ் (சென்)
161) செல்வ பென்சி ஆபேல் (ராணி)
162) செல்வராணி ஆல்பர்ட் (சென்)
163) செல்வி அமிர்தராஜ் (திளு)
164) செல்வின் S. (தூத்)
165) ஷாலி எடிசன் (சென்)
166) சாந்தி ஆல்பர்ட் (தென்)
167) சாந்தி ஜெயசீலன் (சென்)
168) சாந்தி ரோஸ் (கோய)
169) ஷர்மீளா செல்வராஜ் (கட)
170) ஷீலா G. (செங்)
171) ஷீலா இஸ்ரேல் (திசி)
172) ஷெரீன் ஜெபராஜ் (திளு)
173) சில்வியா ஃபின்னி Dr. (சென்)
174) சவுந்;தரம் சாலமோன் (சென்)
175) ஸ்டெல்லா டேவிட் (தூத்)
176) ஸ்டெல்லா சூசையா (தூத்)
177) சுகந்தி ஜெயச்சந்திரன் (கோய)
178) சுகிர்தா சின்னதுரை (திலி)
179) சுஜாதா சாமுவேல் (சென்)
180) சுரேஷ் பாபு (கோய)
181) சுசீலா தியோடர் (திசி)
182) சுவர்ணலதா அற்புதராஜ் (சென்)
183) தனசீலி ஞானராஜ் (சென்)
184) தெல்மா ஸ்டேன்லி (மது)
185) உமா குளோரி (சென்)
186) உஷா ஜெபராணி SIS. H. (திளு)
187) வனஜா மாரிமுத்து (மது)
188) வசந்தா அன்பன் (திலி)
189) வசந்தா சந்திரசேகர் (கோய)
190) வசந்தா துரைராஜ் (ஊஎப்டி)(திசி)
191) வசந்தா சேகர் (சென்)
192) வசந்தி கருணாகரன் (சென்)
193) வசந்தி வாசன் (சென்)
194) விஜயராணி A. (சென்)
195) விஜி டேனியல் (செங்)
196) விண்ணரசி ரோஸ் (சென்)
197) வினோலியா ஜேம்ஸ் (தூத்)
198) வினோலியா பால் (மது)
199) வினோலியா வில்சன் (திதூ)
200) வைலட் கிறிஸ்டோபர் (திலி)
201) வைலட் சைரஸ் (திலி)

# வேதாகம போட்டி-182 டிசம்பர் போட்டிகள் - எஸ்றா

## சரியான விடைகள்

1. செரெபியா எஸ்றா 8:18
2. ஆலயம் கட்டிமுடிந்தது எஸ்றா6:15
3. தரியு எஸ்றா 6:1
4. சகரியா எஸ்றா 5:1
5. ரெகூம், சிம்சா எஸ்றா 4:8
6. இருபது வயது எஸ்றா 3:8
7. பர. தேவ. கர்த்தர் எஸ்றா 1:2
8. தேவ. ஆல. வேலை எஸ்றா 4:8
9. சரி - எஸ்றா1:3
10. தவறு - எஸ்றா 4:20
11. தவறு - எஸ்றா 6:2
12. சரி - எஸ்றா 9:15
13. ஆ - வெண்கலபாத்திரம் எஸ்றா 8:27
14. ஈ - கோரேசின் ஆவியை எஸ்றா 1:1
15. ஈ - பட்டணங்களில் எஸ்றா 2:70
16. ஆ - என் முகத்தை எஸ்றா 9:6
17. கோரோஸ் ராஜா எஸ்றா 19:7
18. தேவ.ஆல.பிரதிஷ்டை எஸ்றா 6:16,17
19. தரியு, கோரேஸ், அர்.சாஷ்டா 6:1-6
20. எருசலேமில் எஸ்றா 3:16

---

==========================================================================================

# ‘அனைவரும் ஊழியத்தில்’

## ஒவ்வொருவரும் 30-கைப்பிரதிகளை விநியோகிக்கும் திட்டம்

### இத்திட்டத்தின் செயல்முறை பின்வருமாறு

**1. இத்திட்டத்தில் பங்குபெறுவோர்:** இரட்சிப்பு பத்திரிக்கையின் சந்தாதாரர்கள், நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழிய் ஆதரவாளர்கள், வேதாகம போட்டியின் பங்காளர்கள், ஜெப-ஜன்னல் ஜெப பங்காளர்கள் ஆகிய அனைவரும்.

**2.நாங்கள் செய்வது:** மேற்கண்ட நமது ஊழிய ஆதரவாளர்களான உங்கள் அனைவருக்கும் வருடம் ஒருமுறை 30-கைப்பிரதிகளை அனுப்பிவைப்போம். ஒவ்வொரு காலண்டர் மாதத்திலும் தெரிந்தெடுக்கப்பட்ட 30 அன்பர்களுக்கு தபால் மூலம் கைப்பிரதிகள் அனுப்பிவைக்கப்படும்.

**3. நீங்கள் செய்யவேண்டியது:** நீங்கள் வீட்டிலிருந்தவாறே உங்கள் அண்டைவீட்டார், காய்கறி விற்போர், பால் போடுவோர், எலக்ட்ரீஷியன், பிளம்பர், கார்பென்டர், டிரைவர், தூய்மை பணியாளர், வீட்டு-வேலைசெய்வோர், சமையல் எரிவாயு வெண்டர், தபால்க்காரர்கள், மெக்கானிக்குகள் ஆகியோரில் இயேசுவை அறியாதவர்களுக்கு ஜெபத்துடன் கைப்பிரதிகளை வழங்க வேண்டும். இத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு நல்கி நற்செய்தி பரவிட உதவுங்கள்.

**பின்-குறிப்பு:** இத்திட்டத்தில் பங்குபெற இயலாத நிலையில் இருப்பவர்கள் உங்கள் இயலாமையை வாட்ஸ்அப் மெஸேஜ் வாயிலாக எங்களுக்கு தெரியப்படுத்தலாம். எங்கள் வாட்ஸ்-அப் எண்: 9789914463.

---

அருட்திரு. தர்மராஜா, ஊழிய இயக்குநர், இரட்சிப்பு ஊழியங்கள், சென்னை-93, தென்னிந்தியா

==========================================================================================

# வேதாகம போட்டி-183

வேத-பகுதி: நெகேமியா புத்தகம் படைப்பாசிரியர்: அருட்திரு.எஸ்.ஜே.டி. தர்மராஜா

**கேள்விகளின் கருக்களம்:**

**1. பரிசுத்த வேதாகமம் (பவர்) நெகேமியா புத்தகம்** (12 கேள்விகள்)

**2. இரட்சிப்பு பத்திரிக்கை: பக்கம் 2, 19** (3 கேள்விகள்) (நெகேமியா வசனங்கள்)

மூன்று கேள்விகள் இரட்சிப்பு பத்திரிக்கையிலிருந்தும் (நெகேமியா-பகுதி), பன்னிரண்டு கேள்விகள் பவர்-பைபிள் எனப்படும் பரிசுத்த வேதாகமத்திலிருந்தும் கேட்கப்படுகிறது. 3-கேள்விகளுக்கான பதில்களை மாத்திரம் இரட்சிப்பு புத்தகத்தில் தேடி எழுதவேண்டும்.

<u>வேதவசன இருப்பிடத்துடன் பதிலளிக்கவேண்டும். பதிலளிக்க கடைசிநாள்: 25-01-2026</u>

1. 'ஆகாமியம்' என்ற சொல்லுக்கு திருவிவிலியம் குறிப்பிடும் வார்த்தை எது?
2. நெகேமியா-9:38ல் புதுப்பிக்கப்பட்டவை யாருடைய உறுதிமொழிகள்?
3. நெகேமியா-9:38ல் காண்பதுபோல், நாம் எவற்றை எழுதிவைக்க வேண்டும்?
4. எவர்களின் வம்ச அட்டவணை நெகேமியாவுக்கு அகப்பட்டது?
5. ஆனானியும், வெறே சிலரும் எங்கிருந்து சூசான் அரமனைக்கு வந்தார்கள்?
6. ஆசாரியனாகிய எலியாசிப் யாரோடு சம்பந்தம் கலந்தவனாயிருந்தான்?
7. வர்த்தகரும், சரக்குகளை விற்போரும் இரண்டொருதரம் எங்கு இராத்தங்கினர்?
8. 'மீன்வாசலை அசெனாவின் குமாரர் மூடினார்கள்' - **சரியா தவறா?**

10. 'கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்கள் பெலன்' - **சரியா தவறா?**

9. 'நம்முடைய தேவன் நமக்காக யுத்தம்பண்ணுவார்' - **சரியா தவறா?**

10. எலியாசிப் தொபியாவுக்கு ஆலய பிரகாரங்களில் **'இதை'** ஆயத்தம்செய்தான்:
அ) ஒரு பலியை ஆ) ஒரு குழுவை இ) ஒரு அறையை ஈ) ஒரு ஆசனத்தை

11. **'இது'** 52 நாளுக்குள் கட்டப்பட்டு எலூல் மாதம் 25ம் தேதி முடிந்தது:
அ) ஆலயம் ஆ) அரமனை இ) அலங்கம் ஈ) மாளிகை

12. '**இங்கு**' குடியிருக்க மனப்பூர்வமாய் சம்மதித்தவர்களை ஜனங்கள் வாழ்த்தினர்:
அ) யூதேயாவில் ஆ) எருசலேமில் இ) பாபிலோனில் ஈ) கூடாரங்களில்

13. அலவன்ஸ் நான்வாங்கவில்லை! அப்பம் ரசம் கேட்கவில்லை!
பயிர்நிலம் நான் வாங்கவில்லை! பல வருஷம் ரேஷன் இல்லை! **நான் யார்? நான் யார்?**

14. சக்கந்தம் பண்ணியவனுக்கு, சம்பந்தியாகிவிட்டான்!
அவதூறு சொன்னவனுக்கு, ஆலயத்தில் ரூம் கொடுத்தான்! **இவன் யார்? இவன் யார்?**

15. சீண்டிப் பார்த்த கடிதம்! சீல் போடாத கடிதம்!
குற்றச்சாட்டுக் கடிதம்! குள்ளநரியின் கடிதம!
அழைப்புவிட்ட கடிதம்! ஆலோசனைக்கு கடிதம்! **யார்? எழுதியது? யாருக்கு எழுதியது?**

---

பதில் அனுப்பவேண்டிய முகவரி: திருமதி.ஜெயசீலி தர்மராஜா, எஃப்-1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை-93. வாட்ஸ்-அப்: 9789914463

==========================================================================================

## கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

பாகம்-80 ஜனவரி 2026 எப்பிசோடு-80

# ராஜ்யபாரம் பண்ணுகிற கர்த்தர்

**GOD THAT REIGNETH**

theos pou basilevei – தியோஸ் பொவ் பஸிலேவி

அல்லேலூயா, சர்வவல்லமையுள்ள தேனாகிய கர்த்தர் இராஜ்யபாரம்பண்ணுகிறார். வெளி.9:6பி

Alleluia! The Lord God omnipotent, reigneth. Rev. 9:6b



**சகோ. சி. ஏஞ்சல்**

தமது மகா வல்லமையைக்கொண்டு ராஜ்யபாரம்பண்ணுகிற, இருக்கிறவரும் இருந்தவரும், வருகிறவருமானவரின் நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளுக்கு மகத்துவங்கள் நிறைந்த புதிய ஆண்டின் நல்வாழ்த்துக்கள்.

**தானி.**7:2-7 வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யங்களின் ராஜரீகமும் ஆளுகையும், மகத்துவமும் உன்னதமானவரின் பரிசுத்தவான்களாகிய நமக்கும் நம் தலைமுறைக்கும் கொடுக்கப்படும். அவர்கள், என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ராஜ்யங்களைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்

**எரே.**10:17 இந்திய தேசத்தில் ஜாதிகளுடைய எல்லா ஞானிகளிலும், அவர்களுடைய எல்லா ராஜ்யத்திலும் இயேசு தெய்வத்துக்கு ஒப்பானவர் இல்லை என்பதை அறிந்து பயப்படுவார்கள்.

**2நாளா.**36:22,23 தீர்க்கத்தரிசிகளின் வார்த்தைகள், பரிபூரணமாக நிறைவேறுகிற ஆண்டாக, ஆலயங்கள் கட்டப்படுகிற ஆண்டாக, இந்திய ராஜ்யம் இயேசு கிறிஸ்துவை பிரஸ்தாபிக்கிற ஆண்டாக மறுரூபப்படுவதற்காக ஸ்தோத்திரம்.

**2நாளா.**20:30, **2சாமு.** 7:12,16 கிறிஸ்துவின் சந்ததிகளை எழும்பப்பண்ணி, அவர்கள் ராஜ்யத்தை நிலைப்படுத்தி யுத்தமில்லாத இளைப்பாறுதலை கட்டளை யிட்டதினால் பரலோக ராஜ்யப்பணிகள் அமரிக்கையாய் இருக்கப்போவதற்காய் கோடி ஸ்தோத்திரம்!

**ஜெபம்:** எங்கள் தேசத்தின்மீதும், தேவபிள்ளைகள்மீதும் ராஜய்யபாரம் செய்கிற கிறிஸ்துவே! உம்மைத் துதிக்கிறோம். நெகே.9:21-25ன்படி, ராஜயங்களை தேவபிள்ளைகளிடம் ஒப்புக்கொடுத்து, சத்துருக்களின் மேட்டிமையை மிதித்து, பரலோக தலைமுறைகளை வானத்தின் நட்சத்திரங்கள் போல பெருகச்செய்து, அரணான பட்டணங்களை, செழுமையான பூமியை, சகல ஆசீர்வாதங் களை சுதந்தரித்து, தேவதயவால் விருட்சமாகி, கீழே வேர்பற்றி, மேலே கனி கொடுக்கச் செய்யும் கர்த்தருடைய வைராக்கியத்துக்காக நன்றிசொல்லுகிறோம், பிதாவே. அல்லேலூயா! ஆமென்.

---

**தொகுப்பு: சகோ. சி. ஏஞ்சல் B.SC திருநெல்வேலி, தென்னிந்தியா**

==========================================================================



**தேன்-துளி வேத வசனக் கதைகள்**

(கதை-176 ஜனவரி 2026)

# அன்பின் எல்லைக்கு அளவே இல்லை

சகோ. எம். அசரியா ஞானதாஸ் எம்.ஏ; எம்.எட்

JOSHIE என்ற தேவமனிதர் ஆண், பெண் என 2 பூனைக்குட்டிகளை நேர்த்தியாக பயிற்சியளித்து வளர்த்துவந்தார். அந்த பூனைக்குட்டி கள் அவரது பிள்ளைகளுடன் மிகவும் செல்லமாக விளையாடின. அவரது வீட்டில் பல கவலைகள், பிரச்சனைகள் நடுவில் இந்த செல்ல பூனைக்குட்டிகளின் சாகச விளையாட்டால் கவலைகளை மறந்து JOSHIE மற்றும் அவரது குடும்பத்தினர் மகிழ்ச்சியாய் வாழ்ந்துவந்தனர். இரண்டு பூனைக்குட்டிகளுக்கும் ஒரே பாத்திரத்திரல்தான் பால் ஊற்றி வைப்பார்கள். ஓருவேளை முதலில் பெண் பூனைக்குட்டி பாலை குடித்தால் ஆண் பூனைக்குட்டி அசையாமல் நின்று அதைப் பார்த்துக்கொண்டிருந்து விட்டு பின்னர் பாலைக் குடிக்கும். ஒருவேளை ஆண் பூனைக்குட்டி வெளியே சென்றிருந்தால பெண் பூனைக்குட்டி பாலை உடனே குடிக்காமல் ஆண் பூனைக்குட்டி வந்தபின்னர் ஒன்று மாற்றி ஒன்றாக பாலைக்குடிக்கும். இத்தகைய அன்பை அவை பெற்றிருந்தன. இந்தப் பூனைக்குட்டிகளைப்போல், நாமும் அன்பு, பொறுமை, விட்டுக்கொடுத்தல் ஆகிய பண்புகளைக் கற்றுக் கொள்ளவேண்டியது அவசியமாகும்.

பிரியமானவர்களே! நம் வாழ்வில்கூட, இந்த மூன்று பண்புகளும் மிகவும் அவசியமானவை ஆகும். இயேசு கிறிஸ்து இவவுலகில் வாழ்ந்த நாட்களில் எல்லாவிதத்திலும் இவ்வுலக மக்களுக்கு நன்மைகளைச் செய்து, நாடு நகரெங்கும் நற்போதகங்களை வழங்கி, பார்வை அற்றோர், காதுகேளாதோர், முடவர்கள், தொழுநோயாளிகள் ஆகியோருக்கு சுகம் அளித்து, மரித்தோரை உயிரோடெழுப்பி, அநேக அற்புத-அடையாளங்களைச் செய்து தமது அன்பு, பொறுமை, விட்டுக்கொடுக்கும் தன்மை ஆகிய முன்மாதிரிகளை நமக்குக் கற்பித்திருக்கிறார். ஆனால், அவருடைய பிள்ளைகள் என சொல்லிக்கொள்ளும் நாமோ, குடும்பங்களிலும், வாழ்விடங்களிலும், பணித்தளங்களிலும், திருச்சபையிலும் பகை, விரோதம், அடிதடி, கொலை வெறி என சாத்தானின் பண்புகளோடு வாழும் அவலநிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறோம். இந்த புதிய ஆண்டில், நாம் புதிய தீர்மானங்களை எடுத்து, தேவ ஞானத்தோடு செயல்பட்டு அன்பு, பொறுமை, விட்டுக்கொடுத்தல் ஆகிய நற்பண்புகளை கடைபிடித்து, ஆண்டவர் தரும் மேலான ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வோமாக. வேதம் இவ்விதமாய் சொல்கிறது:

நீங்கள் அன்பில் வேரூன்றி நிலைபெற்றிருங்கள். எபே-3:17

அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும். கலா-5:6

கிறிஸ்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல் அன்பில் நடவுங்கள். எபே-5:2

---

**M.AZARIAH GNANADOSS M.A, M.ED**

**EDITOR, RATCHIPPU TAMIL CHRISTIAN MONTHLY, SALIGRAMAM, CHENNAI-93. MOBILE:9962924900**

==========================================================================

இந்திய கிறிஸ்தவ திருச்சபை சரிதை
(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)



# இரண்டாயிரம் ஆண்டு வரலாறு
# 2ம் வருகைக்குத் தயாராகு

தொகுதி-9 பகுதி-2(1) எப்பிசோடு-42 ஜனவரி 2026

கட்டுரை ஆசிரியர்: அறிவர். திருமதி. சலோமி மனோகர்

**9. இந்திய கிறிஸ்தவம் - 17ம் நூற்றாண்டு:**

**2.(1) ஐரோப்பியர் (டச்சு, ஆங்கிலம்) வருகை:**

17ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இந்தியாவில் போர்த்துகீசிய ஆதிக்கம் மற்றும் மிஷனரிப்பணி குறையத் தொடங்கியது. போர்த்துகீசிய மிஷனரிகள் (குறிப்பாக ஜேசுயிட்டுகள்), பண்டைய தாமஸ் கிறிஸ்தவர்கள் மற்றும் கடலோர கிறிஸ்தவ சமூகங்கள் மற்றும் நிறுவனங்களை கத்தோலிக்க மதத்திற்கு மாற்றுவதில் கவனம் செலுத்தினர். 17ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பியர்கள், குறிப்பாக டென்மார்க் மற்றும் ஜெர்மன் புராட்டஸ்டன்ட் மிஷனரிகள், இந்தியாவுக்கு வந்து, டிரான்க்கியூபார் (தரங்கம்பாடி), கல்கத்தா பகுதிகளில் கவனம் செலுத்தினர்; அவர்கள், 18ஆம் நூற்றாண்டில் வலுவான சமூகங்களையும் நிறுவனங்களையும் நிறுவினர்.

**1. டச்சுக் குடியரசு:**

17ம் நூற்றாண்டில் டச்சுக்காரர்கள் உலக வர்த்தகத்தில் ஆதிக்கம் செலுத்தி, ஒரு பரந்த காலனித்துவ சாம்ராஜ்யத்தை நிறுவி, அதில் தங்களுக்கென மிகப்பெரிய வணிகக் கட்டமைப்பையும், கடற்படையையும் வைத்திருந்தார்கள். மட்டுமல்ல, அமெரிக்கா, தென்னாப்பிரிக்கா மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் சுமத்ரா, ஜாவா, மலாய் தீபகற்பம், போர்னியோ, மொலுக்காஸ் ஆகிய பகுதிகளை; தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். இதில் கிழக்கிந்திய (டச்சு) மற்றும் மேற்கிந்திய நிறுவனங்கள் முக்கிய பங்கு வகித்தன. டச்சு சமூக கிறிஸ்தவம், கேல்வினிசத்தால் மிகவும் பாதிக்கப்பட்டது, 17ம் நூற்றாண்டில், கேல்வினிசம் ஆதிக்கம் செலுத்தும் மதமாகவும் டச்சுக் குடியரசின் அடையாளமாகவும் மாறியது. கேல்வினிசத்தை டச்சு குடியரசு ஆதரித்தாலும், நெதர்லாந்தில் கத்தோலிக்கர்கள் மற்றும் மென்னோனைட்டுகள் உட்பட பிற மதக்குழுக்களின் மக்கள்தொகையே அதிகமாக இருந்தது. அவர்கள் பொதுவாக தங்கள் நம்பிக்கையை சகிப்புத்தன்மையுடன் கடைப்பிடித்தனர்.

டச்சு சீர்திருத்த திருச்சபை, மிஷனரிப்பணி மற்றும் காலனித்துவ விரிவாக்கம் மூலம் உலகளவில் விரிவடைந்தது. 'டார்ட் சினோட்' (கி.பி.1618-1619) டச்சு சீர்திருத்த திருச்சபைக்குள் இருந்த இறையியல் சர்ச்சைகளை சரிசெய்து அதன் இறையியல் கோட்பாடுகளை உறுதிப் படுத்தியது. திருச்சபை நிர்வாகத்தில் சாதாரண உறுப்பினர்கள், மூப்பர்கள், வார்டன்கள், வழக்கறிஞர்கள் போன்றோர் சர்ச் விவகாரங்கள் மற்றும் நிதிகளை மேற்பார்வையிட்டனர். 17ம் நூற்றாண்டில், டச்சு, உலகளாவிய பொருளாதார மற்றும் கடல்சார் சக்தியாக மாறியது.

ஆனால், 17ம் நூற்றாண்டின் இறுதியில் நடந்த ஆங்கிலோ-டச்சுப் போர்கள் (கி.பி.1652-1674) மற்றும் பிராங்கோ-டச்சுப் போர் (கி.பி.1672-1678) ஆகியவை டச்சு அதிகார வீழ்ச்சிக்கு வித்திட்டது.

**2. பிரிட்டிஷ் அரசு:**

ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வருவதற்கு முன்பே இங்கு கிறிஸ்தவம் இருந்தது; எனினும், ஆங்கிலேயர் வணிகத்தோடு கிறிஸ்தவத்தைப் பரப்புவதிலும் முக்கிய பங்கு வகித்தனர். இந்திய புராட்டஸ்டன்ட் சபையாக நிறுவப்பட்ட இங்கிலாந்து திருச்சபை, அதன் அடையாளத்தை முழுமையாக உறுதிப்படுத்தியது. சமூக சீர்திருத்தங்களில் ஆங்கிலேய மிஷனரிகளின் பங்கு அளப்பெரியது. ஆனாலும், காலனித்துவம் மற்றும் கலாச்சார ஏகாதிபத்தியத்திற்காக அவர்கள் விமர்சனங் களை எதிர்கொண்டனர். கத்தோலிக்கம், பியூரிட்டன் ஆகிய பிரிவுகள், இந்திய புராட்டஸ்டன்ட் திருச்சபைக்கு அதிக சவால்களை அளித்தன.

பக்திவிருத்தி, பைபிள் மீதான அதிகாரம் மற்றும் எளிமையான வழிபாட்டு முறை ஆகியவற்றுக்கு பியூரிடன்கள்; அளித்த முக்கியத்துவம், இங்கிலாந்து திருச்சபையுடன் மோதலுக்கு வழிவகுத்தது. ஆங்கில உள்நாட்டுப்போர் (கி.பி.1642-1651) மத பதட்டங்களால் தூண்டப்பட்டது, இதில் பியூரிடன்களின் பங்கு அதிகம். போருக்குப் பிறகு, பியூரிடன்களின் வாரிசுகள், பல்வேறு சீர்திருத்தப் பிரிவுகளை உருவாக்கினர். கி.பி.1689ம் ஆண்டு சகிப்புத்தன்மைச் சட்டம், எதிர்ப்பாளர்களான புராட்டஸ்டன்ட்டுகளுக்கு வழிபாட்டு சுதந்திரத்தை வழங்கியது. வெஸ்ட்மின்ஸ்டர் விசுவாச அறிக்கை, சீர்திருத்த இறையியலில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தியது.

ராயலிஸ்டுகளும் (இங்கிலாந்து திருச்சபை ஆதரவு) பியூரிஸ்ட்களும் (பியூரிட்டன் ஆதரவு) உள்நாட்டு மோதலில் ஈடுபட்டனர். பைபிள், பொது-பிரார்த்தனை நூல் ஆகியவை பிறமொழி சொற்களை கடன்வாங்கி தங்கள் சொற்களஞ்சியத்தை வடிவமைத்தன; இதனால், இந்தியாவில் ஆங்கிலமொழிப் பயன்பாடு அதிகரித்தது. அதேசமயம், பலமொழி ஆவணங்கள் தயாரிக்கப்பட்ட தால், ஆங்கில மொழிவளம் பாதிக்கப்பட்டது.

16ம் மற்றும் 17ம் நூற்றாண்டுகளில் ஆங்கில சீர்திருத்தம் நடைபெற்றது. இங்கிலாந்து திருச்சபை தனது 'பொது பிரார்த்தனை' புத்தகத்தை கி.பி.1662ல் மீள்பதிப்பு செய்து தனது ஆங்கிலிகன் பங்கை உறுதிப்படுத்தியது. கி.பி.1757 முதல் 1858 வரை, கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவை ஆண்டது.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்......

AUTHOR: DR. MRS. SALOMI MANOHAR M.A, M.PHIL, P.HD ASSISTANT PROFESSOR (RTD),
(POPE'S COLLEGE, SAWYERPURAM) THIRUVANMIYUR, CHENNAI-41, SOUTH INDIA

================================================================================

# ஜெப-ஜன்னல் ஜெப நேரங்கள் ஜனவரி 2026

### ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்

நாள்: 09-01-2026 இரண்டாம் வெள்ளி

நேரம்: காலை 5-முதல் 6-மணி வரை.

### ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்

நாள்: 16-01-2026 மூன்றாம் வெள்ளி

நேரம்: மதியம் 1-முதல் 2-மணி வரை.

### ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்

நாள்: 23-01-2026 நான்காம் வெள்ளி

நேரம்: இரவு 8-முதல் 10-மணி வரை.

பிரியமானவர்களே! இந்த ஜெப-ஜன்னல் ஜெப-நேரங்களில் தானி-6:10 வசனத்தின்படி "தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க" ஜெபித்ததைப் போல் நமது இயக்குநரும், ஜெப-ஜன்னல் ஜெப-வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக் கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

==========================================================================================

## DETAILS ABOUT US

### CONTACT DETAILS:


MOBILE: 9962924900/7871676100

WHATSAPP: 9789914463/7871676100

E-MAIL: sjddharmaraja@gmail.com

OUR WEBSITE: www.ratchippu.com

POSTAL ADDRESS: REV. S.J.D. DHARMARAJA, MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST., GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93

ADDL. E-MAIL: ratchippuratchippu@gmail.com


### BANK DETAILS:

NAME: DHARMARAJA SJD.

S.B. ACCOUNT NO: 601071548.

BANK & BRANCH: INDIAN BANK, NESAPAKKAM

IFSC CODE: IDIB000N122.

BANK ADDRESS: NESAPAKKAM, CHENNAI-78.

### UPI DETAILS:

UPI NAME: GOOGL-PAY (G-PAY)

NAME: REV. DHARMARAJA SJD

G-PAY NUMBER: 9789914463

============================================================================================
=

வசன தியானம்-165



# புதுப்பிக்கும் புத்தாண்டு

## புத்தாண்டு நல்வழித் தீர்மானங்களை எழுதிவைத்து புதுப்பித்துக்கொள்வோம்

நாங்கள் உறுதியான உடன்படிக்கைபண்ணி அதை எழுதி வைக்கிறோம்; எங்கள் பிரபுக்களும், எங்கள் லேவியரும், எங்கள் ஆசாரியரும் அதற்கு முத்திரைபோடுவார்கள் என்றார்கள். நெகே.9:38

புத்தாண்டில் புதிய தீர்மானங்கள் எடுக்கும் உறவினர் மற்றும் நண்பர்களிடம் அவர்களுடைய தீர்மானங்களை, விசுவாசம் மற்றும் நம்பிக்கையுடன் உறுதிமொழியாக மீண்டும் சொல்லும்படி நான் கேட்டுக்கொள்வதுண்டு. அநேக நண்பர்கள் கண்ணீர்மல்க அந்த உறுதிமொழிகளைச் சொல்வதையும், அந்த உறுதிமொழி வார்த்தைகளைக் அவர்கள் சொல்கிறபோது சகவிசுவாசிகள் தங்கள் கரங்களை மார்பில் வைத்திருப்பதையும் நான் பார்த்திருக்கிறேன்.

**புதுப்பிக்கப்பட்ட இஸ்ரவேலரின் உறுதிமொழிகள்: (நெகே.9:38)** இஸ்ரவேலர், பாபிலோனின் சிறையிருப்பிலிருந்து திரும்பியதும், நெகேமியாவுடன் கர்த்தருக்குள், தங்கள் பொருத்தனை களைப் புதுப்பித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கடவுளின் சேவைக்கு மீண்டும் தங்களை அர்ப்பணிக்க ஒப்புக்கொடுத்தனர்.

இஸ்ரவேல் ஜனங்கள் கடவுளுக்கு முன்பாக நின்று, தங்கள் தலைவர்களுடன் இணைந்து, ‘தங்கள் பாவங்களை உணர்ந்து’ ‘தங்கள் தீச்செயல்களுக்காக வருந்தி’ மனந்திரும்புதலுக்கான தங்கள் உறுதிமொழியைக் எழுதிவைத்து கடைபிடிக்க சபதம் செய்தார்கள். தங்கள் உடன் படிக்கையில் அவர்கள், தங்கள் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மன தோடும், முழு பலத்தோடும் கர்த்தரை நேசிப்பதாக வாக்குறுதி அளித்தனர்.

**புதுப்பிக்கப்பட்ட கடவுளின் உறுதிமொழிகள்:** 2,000 ஆண்டுகளுக்கு முன், கடவுள் தம் குமாரனை அனுப்பி நமக்கான தமது வாக்குறுதிகளைப் புதுப்பித்தார். இயேசு, “பிதாவே! இவ்வுலகில் நீர் எனக்குக் தந்தவர்களுக்கு நான் உம்மை வெளிப்படுத்தினேன். அவர்கள் உம் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்தார்கள்.” என யோவா.17:6ல் ஜெபித்து, கடவுளின் வாக்குத் தத்தங்களை நமக்காக மீண்டும் புதுப்பித்தார். அவ்விதமாகவே, நாமும், கடவுளுக்கு முன்பாக எடுத்துள்ள ‘**புத்தாண்டு நல்வழித் தீர்மானங்களை’ எழுதிவைத்து புதுப்பித்துக்கொள்வோம்.**

**ஜெபம்:** கடவுளே! உமக்குள் எனது புத்தாண்டு நல்வழித் தீர்மானங்களை உறுதிமொழிகளாக இன்று புதுப்பிக்கிறேன். இந்த உறுதிமொழிகளில்;;; நிலைத்திருக்க எனக்கு உதவி புரியும். இயேசுவின் நாமத்தில், ஆமென்.

---

அருட்திரு. தர்மராஜா, ஊழிய இயக்குநர், இரட்சிப்பு ஊழியங்கள், சென்னை-93, தென்னிந்தியா

==========================================================================

# செய்தித்துளிகள் ஜனவரி 2026

1. காசா போர் நிறுத்தத்தையடுத்து 2 ஆண்டுகளுக்குப்பின், பெத்லகேமில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்ற பிரமாண்ட கிறிஸ்துமஸ்-மரவிழா கொண்டாட்டம். 'பெத்லகேம் ஒளி -உலகின் ஒளி' கார்டினல் பியர்பட்டிஸ்டா பிசாபல்லா உரை.

2. ஊழல் இல்லாத நாடுகளின் பட்டியலில் இந்தியா 96ம் இடத்தில் உள்ளது. 1ம் இடத்தில் டென்மார்க்கும், 2ம் இடத்தில் பின்லாந்தும், 3ம் இடத்தில் சிங்கப்பூரும், 76ம் இடத்தில் சீனாவும், 135ம் இடத்தில் பாகிஸ்தானும் உள்ளன.

3. அசாம்-கவுகாத்தியில் லோகபிரியா கோபிநாத் பர்தலோய் சர்வதேச விமான நிலையத்தில் புதிய முனைய கட்டிடம் திறக்கப்பட்டது. புதிய கட்டிடம் மற்றும் தொழில்நுட்பம் பொருளாதார-சுற்றுலா மேம்பாட்டுக்கு உதவும் என தகவல்.

4. பண்டிகைகால தொலைதூர சேவையில் தனியார் பேருந்துகளை பயன்படுத்த தமிழக போக்குவரத்துத்துறை திட்டம். தனியார் பேருந்துகள் வாடகைக்கு எடுக்கப்படும்; ஓட்டுநர், மற்றும் நடத்துநர்களை தமிழக அரசு நியமிக்கும் என தகவல்.

5. இவ்வாண்டு ஜூன்-ஜூலை மாதங்களில் மெக்சிகோ, கனடா, அமெரிக்கா நாடுகளில் நடை பெறும் 23-வது பிபா உலகக் கோப்பை கால்பந்து போட்டித் தொடரில் பட்டம் வெல்லும் அணி ரூ.452 கோடி பரிசுபெறும் என் பிபா தகவல்.

==========================================================================================

# புத்தாண்டு 2026
# நல்வாழ்த்துக்கள்

அன்பார்ந்த இரட்சிப்பு பத்திரிக்கையின் வாசகர்கள், ஆதரவாளர்கள், படைப்பாளர்கள், அலுவலகப் பணியாளர்கள், வலைதள பணியாளர்கள், கைபிரதி களப்பணி யாளர்கள், தபால்-துறை மற்றும் அச்சகத்து நண்பர்கள் அனைத்து திருச்சபை இறை மக்கள், ஆகிய உங்கள் அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த **புத்தாண்டு 2026** நல்வாழ்த்துக்கள்.




இரட்சிப்பு
ஊழிய-குடும்பத்தார்

ஜனவரி 01, 2026, புத்தாண்டு